

தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன ?

-பகுதி 2


நம்முடைய வாழ்வில் தேவனுடைய வார்த்தையின் தாக்கம் வல்லமையாய் இருக்கக்கூடும் -அதின் வாக்குத்தத்தங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு நம்முடைய வாழ்வினை நாம் ஒருங்கிணைக்கும் போது. "தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன" என்ற கருப்பொருள் கொண்ட இந்த 6 பகுதி தொடரில், தேவனுடைய வார்த்தை நமக்குள் உருவாக்குவதென்ன என்ற குறிப்பம்சங்களை நாம் ஆராயப்போகிறோம். முதல் பகுதியில், தேவனுடைய வார்த்தையின் தன்மையை கற்றுக்கொண்டோம். அது ஜீவனுள்ளது, பலன் செய்கிறது மற்றும் ஊடுருவிச் செல்கிறதென்று கண்டறிந்தோம். தேவனுடைய வார்த்தையும் தேவனுடைய ஆவியும் எப்படி ஒன்றொடொன்று இணைந்து செயலாற்றுகின்றன என கவனித்தோம். வார்த்தையும் ஆவியும் இணைந்து செயலாற்றும் போது, தேவனுடைய முழு சிருஷ்டிக்கும் வல்லமையின் உருவாக இருக்கிறது.

முதல் பாடத்தில், நாம் தேவனுடைய வார்த்தைக்கு எப்படி பதிலளிக்கிறோமோ, அதைப்பொருத்தே, அந்த வார்த்தையின் விளைவுகள் நமக்குள் இருக்கும் என்று நான் சுட்டிக்காட்டினேன். தேவன் விரும்பும் விளைவுகளைப்பெற, நாம் அசுத்தத்தையும், கொடிய துர்க்குணத்தையும் அகற்றி, அதை தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையை, தேவனிடமிருந்தே வந்த ஒரு செய்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் - எந்த மனிதனிடமிருந்து வரும் ஒரு செய்தியை விட மிக உயர்வாக.

விசுவாசம் எப்படி வருகிறது ?

நம்முடைய தொடரின் இப்பகுதியில், தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் ஏற்படுத்தும் முதல் குறிப்பான விளைவை நான் முன் வைக்கப்போகிறேன். அந்த விளைவு "விசுவாசம்". என் தனிப்பட்ட அனுபவத்தில் இப்பாடத்தை நான் எப்படி கற்றுக்கொண்டேன் என பகிர்ந்து, நான் ஆரம்பம் செய்கிறேன். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, நான் வட ஆப்பிரிக்காவில், பிரிட்டிஷ் ராணுவங்களோடு, மருத்துவமனை உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அச்சமயம் நான் வியாதிப்பட்டேன். பல மாதங்களாக நான் மருத்துவ மனையில் வேதனைப்படுகையில், என்னை சுகமாக்க மருத்துவர்களிடம் அந்த வட ஆப்பிரிக்காவின் சூழலில் எந்த வழியும் இல்லை என உணர ஆரம்பித்தேன்..

இந்த மருத்துவமனை வருவதற்கு சற்று முன்பு தான் நான் ஆண்டவரை தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொண்டேன். என்னுடைய மாற்றத்தின் மூலம், வேதாகமம் உண்மையில் தேவனுடைய வார்த்தை தான் என்பதை நான் விசுவாசிக்க ஆரம்பித்தேன். அப்படி இருந்தும், வேதத்தில் இன்னும் என க்குப்புரியாத பல கருத்துக்களும், சத்தியங்களும் இருந்தன. ஆகையால் மருத்துவமனை படுக்கையில் பல வாரங்களாக நான் கிடந்த போது, நான் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையின்மையின் இருண்ட, தனிமையான பள்ளத்தாக்கில் அமிழ்ந்து போக ஆரம்பித்தேன். இதை தான் ஜான் பனியன் ("மோட்ச பிரயாணம்" என்ற புத்தகத்தில்) "மனச்சோர்வின் சதுப்புநிலம்" என்று அழைக்கிறார்.



இந்த நீண்ட கால மருத்துவமனை வாசத்தில் "எனக்கு விசுவாசம் மட்டும் இருந்தால், தேவன் என்னை நிச்சயமாக சுகமாக்குவார் என்பதை அறிந்திருக்கிறேன்" என்று அடிக்கடி நான் எனக்குள் யோசிப்பேன். "ஆனால் எனக்கு விசுவாசம் இல்லை" என்ற எண்ணம் உடனடியாக எனக்குள் வரும். "எனக்கு விசுவாசம் இல்லை" என்ற அந்த அறிக்கை, சுகமாக்குதலின் எல்லா நம்பிக்கையையும் என்னை விட்டு எடுத்து, மறுபடியும் என்னை நம்பிக்கையின்மையின் பள்ளத்தாக்கில் கவிழ்ந்துவிழ செய்தது.

ஒரு நாள், வேதாகமத்தை என் மடியில் வைத்து, என் படுக்கையில் உட்கார்ந்திருந்த போது, என்னுடைய அந்த இருளை துளைத்துக்கொண்டு, தேவனுடைய பிரகாசமான ஒளிக்கதிர் உள்ளே நுழைந்தது. அவர் கொடுத்த வெளிப்பாடு, எனக்கு மிகுந்த நம்பிக்கையை உருவாக்கியது. அந்த ஒளிக்கதிர் எங்கிருந்து வந்ததென்று அறிய ஆவலாய் இருக்கிறீர்களா? அது ரோமர் 10:17-லிருந்து வந்தது. என் வேதாகமத்தை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த எனக்கு தேவன் வெளிப்படுத்தின ஓர் பகுதி.

> *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

இந்த வசனத்தை நான் வாசித்த போது "விசுவாசம் வரும்" என்ற இரண்டு வார்த்தைகள் துள்ளி குதித்தன. அவ்வார்த்தைகளை நான் திரும்ப, திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தேன்: "விசுவாசம் வரும் ...விசுவாசம் வரும்." எனக்கு விசுவாசம் இல்லையென்றால், நான் விசுவாசத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று தேவன் எனக்கு சொன்னார். விசுவாசம் வருவதற்கு ஒரு வழி இருக்கிறதென்று அவர் எனக்கு காண்பித்துக்கொண்டிருந்தார்.

> *பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை விளங்க செய்யும் போது, அதை உங்களுக்கு உண்மையாயும், தனிப்பட்டதாயும் மாற்றுகிறார்.*

நான் அந்த வசனத்தை திரும்ப, திரும்ப வாசித்த போது, எனக்கு அது என்ன கூறுகிறதென்பதை ஆராய்ந்தேன். நான் என்ன புரிந்துக்கொண்டேன் என்பதை பகிர்ந்துக் கொள்ளுகிறேன். தேவன் நம்முடன் இடைப்படும் போது, மூன்று தொடர் கட்டங்களின் மூலம் அவர் நம்மை விசுவாசத்திற்கு கொண்டு வருகிறார். முதல் கட்டம்: தேவனுடைய வார்த்தை - தேவனுடைய வார்த்தையை கிட்டிச்சேர வேண்டும். இரண்டாம் கட்டம்: கேட்குதல் - தேவனுடைய வார்த்தையை நாம் உண்மையாய் கேட்க வேண்டும். நம்முடைய முழு இருதயத்தையும் மனதையும் நாம் திறக்க வேண்டும். மற்ற எல்லாவற்றையும் தள்ளிவிடும் அளவிற்கு, நாம் தேவன் கூறும் காரியத்திற்கு செவி கொடுக்க வேண்டும். மூன்றாம் கட்டம்: விசுவாசம் - கேட்பதன் விளைவாக விசுவாசம் வருகிறது. இவை தான் மூன்று கட்டங்கள்: தேவனுடைய வார்த்தை கேட்குதல், அதன் பின் விசுவாசம்..

இவ்வழிமுறையை நீங்கள் பின்பற்றினால், விளைவு நிச்சயம் என்று நான் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன். உங்களுக்கு விசுவாசம் இல்லையெனில் - அந்த இருண்ட, தனிமையான பள்ளத்தாக்கில் நீங்கள் விசுவாசத்திற்காக தவித்துக்கொண்டிருந்தால் - உங்களுக்கு இந்த ஆச்சரியமான உண்மையை கூற விரும்புகிறேன்: விசுவாசம் வரும்.

ஒரு ஆழமான தனிப்பட்ட வார்த்தை

இந்த ஆச்சரியமான புரிந்துக்கொள்ளுதலுடன், அவ்வசனத்தின் இன்னும் ஓர் அம்சத்தை ஆராய்வோம். "தேவனுடைய வசனம்" என்பதற்கு அங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ரேமா என்பதாகும். பல்லாண்டுகளாக கிரேக்கம் கற்றதினால், "ரேமா" என்றால், குறிப்பாக "பேசப்படும் ஓர் வார்த்தை" என்பதை நான் கற்றுள்ளேன். அவ்வசனத்தின் மற்ற பகுதியில் இது தெளிவாகிறது: "கேள்வி தேவனுடைய வசனத்தினால்" என்று கூறப்பட்டுள்ளது. ஒரு வார்த்தை பேசப்படாவிட்டால், அதை கேட்க முடியாது. ஆகையால் இந்த கோட்பாடு, வேதத்தை வாசித்து, வெள்ளைத்தாளில் உள்ள கறுப்பு எழுத்துக்களை பார்ப்பதை குறித்ததல்ல. எப்படியோ அந்த கறுப்பு எழுத்துக்கள் நீங்கள் கேட்கக்கூடிய ஒரு சத்தமாக மாற வேண்டும். விசுவாசம் கேள்வியினாலே வரும் - வெறும் வேதத்தை வாசிப்பதினால் வராது.

அந்த கறுப்பு எழுத்துக்களை, உங்களோடு தனிப்பட்ட முறையில் பேசும் ஒரு சத்தமாக மாற்றுவது எது? அதற்கு பதில்: பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை விளங்கச்செய்யும் போது, அதை உங்களுக்கு உண்மையாயும், தனிப்பட்டதாயும் மாற்றுகிறார். பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்தளிக்கும் அவ்வார்த்தைக்கு நீங்கள் செவி கொடுக்கும் போது, விசுவாசம் வருகிறது.

பரிசுத்த ஆவியானவர் ஞானமுள்ளவர்! எந்த நிமிடத்திலும் உங்களுக்கு தேவையான வார்த்தையை அவர் அறிவார். தேவனுடைய வார்த்தைக்கு நேராக உங்களை நடத்தி, அதை உங்களுக்கு ஜீவனுள்ளதாய் மாற்றுகிறார். அப்படி செய்யும் போது, ஜீவனுள்ள தேவனுடைய சத்தம், அவ்வசனத்தின் மூலம் உங்களுடன் பேசுவதை நீங்கள் கேட்கிறீர்கள். அந்த சத்தத்தை கேட்கும் போது, விசுவாசம் வருகிறது - உங்கள் தேவைகளுக்கான விசுவாசம், அந்த நேரத்தில் தேவன் உங்களுக்காக வைத்திருக்கிறவைகளுக்கான விசுவாசம்.

தேவனிடமிருந்து ஓர் செய்தி

நமது பாடத்தின் இக்கட்டத்தில், விசுவாசம் தேவனுடைய

வார்த்தையை கேட்பதினால் உண்டாகிறது என்பதற்கான, வேதாகமத்தின் மிகச்சிறந்த உதாரணங்களில் ஒன்றை முன்வைக்க விரும்புகிறேன். நாம் கன்னி மரியாளின் வாழ்க்கையை பார்ப்போம். இக்கதை உங்களுக்கு அறிமுகமானது - நாசரேத் என்னும் சிறு கிராமத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள், ஒரு நாள் ஒரு தேவ தூதன் தேவனுடைய செய்தியை கொண்டு வந்து, அவள் முன் தோன்றினான். அச்சம்பவத்தின் ஒரு சிறிய பகுதியை லூக்கா 1:30ல் ஆரம்பித்து வாசிக்கலாம்:

> தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.... அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும் ? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.....தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.

சிலர் எனது மதிப்பீட்டை ஏற்காமல் போகலாம், ஆனால் என்னை பொறுத்தவரை இந்த சம்பவம், மனுகுலத்தின் முழு வரலாற்றிலும் நடந்த, மிகச்சிறந்த அற்புதத்திற்கான திறவுகோலாக அமைந்ததென்று நம்புகிறேன். இயேசுவின் பிறப்பை கன்னி மரியாள் அனுபவித்த போது, எல்லா காலத்திலும் நடந்த அற்புதங்களில் மிக சிறந்த ஒன்றின் பகுதியாக இருந்தாள். பின் வரும் பகுதியில் இந்த பெரிய அற்புதத்தை மரியாள் எப்படி பெற்றுக்கொண்டாள் என்பதை நான் காண்பிக்கும் போது, இதை இன்னும் தெளிவாக பார்ப்பீர்கள்.

முதலாவது, அந்த தேவதூதன் தேவனிடமிருந்து ஒரு ரேமா வார்த்தையை கொண்டு வந்தான். (ரேமா என்பது பேசப்பட்ட வார்த்தையாகும் என்பதை நினைவில் கொள்ளவும்.) இது மரியாள் தனக்காக ஜெபத்தில் கேட்டுக்கொண்ட ஒரு வார்த்தையல்ல. இதை கற்பனை கூட செய்திருக்கமாட்டாள். மரியாள் திருமணமாகாத பெண்ணாய் இருந்தபடியால், தேவனிடமிருந்து வந்த வார்த்தை தானாக அவள் மனதில் தோன்றியிருக்க முடியாது. இவ்வார்த்தையின் துவக்கம் தேவனிடம் தான் இருந்ததென்று நாம் முடிவு செய்ய முடியும். தன க்கென்று மரியாள் ஆலோசிக்கவோ, செயல்படுத்தகூடியதை விடவோ தேவனுடைய திட்டம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. தேவனுடைய திட்டம் ஒரு ரேமா வார்த்தையின் மூலம் அவளிடம் வந்தது - பேசப்பட்ட ஒரு வார்த்தையாக.

இந்த அனுபவத்தின் முதல் படியாக, மரியாள் இந்த வார்த்தைக்கு எப்படி உத்தரவு அளித்தாள்? முதலாவது, அதை அவள் ஏற்றுக்கொண்டாள். அவள் எதிர்த்து நிற்கவில்லை. அவள் சொன்னதெல்லாம்: ‘‘நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி என க்கு ஆகக்கடவது". மரியாள் தன் இருதயத்தை தேவனுடைய ரேமா வார்த்தைக்கு - பேசப்பட்ட வார்த்தைக்கு - திறந்து கொடுத்தாள்.

> நம்முடைய இருதயங்களை திறந்து, தேவனுடைய வார்த்தை நம்மில் வேருன்ற நாம் அனுமதிக்கும் போது, விசுவாசம் நமக்கு பகிர்ந்தளிக்கப் படுகிறது.

அவளுடைய அனுபவத்தின் இரண்டாம் கட்டத்தில், மரியாள் வார்த்தையை பெற்றவுடன் என்ன நடந்தது? விசுவாசம் அவளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. ரோமர் 10:17 என்ன கூறினது, நினைவிருக்கிறதா? ‘‘விசுவாசம் கேள்வினாலே வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினாலே வரும்". நம்முடைய இருதயங்களை திறந்து, தேவனுடைய வார்த்தை நம்மில் வேருன்ற நாம் அனுமதிக்கும் போது, விசுவாசம் நமக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அவளுடைய அனுபவத்தின் மூன்றாவது படியில், மரியாளின் இணக்கமான பதிலுக்கு என்ன விளைவு ஏற்பட்டது? தேவன் அவளுக்கு அளித்த வார்த்தையிலிருந்த, அற்புதம் செய்யும் வல்லமையை, அவளுடைய விசுவாசம் கட்டவிழ்த்தது.

உங்கள் கவனத்திற்கு !!

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி *secretary@derekprince.in* அல்லது அலைபேசி *9585538202* தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

இன்னும் தேவையா ?


- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி

See over for address details...

பதிவு செய்க !

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

ISSUE #005



“தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை” என்று தேவதூதன் கூறினான். கிரேக்கத்தில் அவ்வசனத்தின் நேர் மொழிபெயர்ப்பு, “தேவனால் பேசப்பட்ட எந்த வார்த்தையும், வல்லமையற்றிராது” என்பதாகும். இன்னொரு விதமாக, நேர்மறையாக சொன்னால், “தேவனால் பேசப்பட்ட எந்த வார்த்தையும், தன் நிறைவேறுதலுக்கான வல்லமையை, தனக்குள் அடங்கப்பெற்றுள்ளது.”

அப்படியானால், நாம் தேவனிடமிருந்து ஒரு வார்த்தையை பெறும் போது, அது விசுவாசத்தை பகிர்ந்தளிக்கிறது. நம்முடைய விசுவாசம், அவ்வார்த்தையினுள் அடங்கியுள்ள தேவனுடைய அற்புதம் செய்யும் வல்லமையை கட்டவிழ்க்கிறது.

விசுவாசத்தில் பதில் அளித்தல்

கன்னி மரியாளின் சம்பவம், விசுவாசம் எப்படி வருகிறது என்பதற்கான மிக அழகான மற்றும் சிறந்த உதாரணமாகும். விசுவாசம் ரேமா வார்த்தையின் மூலம் வருகிறது - பரிசுத்த ஆவியானவர் அதை நமக்கு உயிர்ப்பிக்கிறார். அதற்கு அர்த்தம் என்ன? பரிசுத்த ஆவியானவர் அந்த வார்த்தையை ஜீவனுள்ளதாயும், உண்மையாயும், தனிப்பட்ட முறையில் எனக்கே கொடுக்கப்பட்டதாயும் மாற்றுகிறார். நாம் விசுவாசத்தில் அதற்கு அளிக்கும் மறுமொழி, தேவன் கொடுத்த அவ்வார்த்தையிலுள்ள வல்லமையை கட்டவிழ்க்கிறது. இதனால் தேவன் வாக்களித்ததை, வார்த்தை நமக்குள் நிறைவேற்ற விடுதலை உண்டாகிறது. தேவனால் பேசப்பட்டு, தேவனிடமிருந்து நம்மிடம் நேரடியாக வரும் எந்த வார்த்தையும், அதன் நிறைவேறுதலுக்கான வல்லமையை தனக்குள் பெற்றுள்ளது.

தேவனிடமிருந்து நம்மிடம் நேரடியாக வரும் எந்த வார்த்தையும், அதன் நிறைவேறுதலுக்கான வல்லமையை தனக்குள் பெற்றுள்ளது.

இந்த செய்தியை நிறைவு செய்ய, நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டும். விசுவாசம் ஏன் இவ்வளவு முக்கியமானது? இதற்கான பதில் எபிரேயர் 11:6ல் உள்ளது:

> விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

தேவன் விசுவாசத்தை கேட்கிறார். இதிலிருந்து அவர் மாற மாட்டார். ஆனால், ஆண்டவர் நம்மீது இரக்கமும் கிருபையுமுள்ளவர். அவர் கேட்கிற அந்த விசுவாசத்தை எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்றும் நமக்கு காண்பிக்கிறார். அந்த விசுவாசத்தை நமக்கு பகிர்ந்தளித்து, தமது நிபந்தனையை நாம் நிறைவேற்ற உதவுகிறார்.

உங்களது பதிலாக மாற்றுங்கள்

விசுவாசம் எப்படி வருகிறது? இச்செய்தியின் முடிவில் மறுபடியும் இந்த செயல்தொடரை நினைவுபடுத்தலாம். விசுவாசம் வரும் என்று உறுதி செய்ய மூன்று படிகள் இதோ. முதல்: தேவன் உங்களோடு பேசும் வார்த்தையை கேட்பதினால் விசுவாசம் வருகிறது. இரண்டாவது படி: பரிசுத்த ஆவியானவர் இதை உங்களுக்கு தனிப்பட்ட ஓர் வார்த்தையாக மாற்றுகிறார். மூன்றாவது படி: இந்த வார்த்தையை நீங்கள் பெற்றுக்கொண்டால், அது உங்களுக்கு விசுவாசத்தை பகிர்ந்தளிக்கிறது. இப்படிகளின் இறுதி விளைவு என்ன? நீங்கள் விசுவாசத்தில் அளித்த பதில், தேவன் வாக்களித்ததை நிறைவேற்ற, அவர் கொடுத்த வார்த்தையிலுள்ள வல்லமையை கட்டவிழ்க்கிறது.

இப்படிகளை நீங்கள் எடுத்துள்ளீர்களா? இச்செய்தியை நாம் நிறைவு செய்யும் நேரத்தில் நீங்கள் பதிலளிக்க விரும்புகிறீர்களா? நீங்கள் ஆயத்தமாய் இருந்தால், பின்வரும் ஜெபத்தை உங்கள் விசுவாசத்தின் சொந்த அறிக்கையாக மாற்றிக்கொள்ளுங்கள்:

> ஆண்டவரே, உம்முடைய ரேமா வார்த்தையை என்னோடு பேசும். நாம் அதைக் கேட்பதற்கு செவிகொடுக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால், அதை எனக்கு உண்மையும், சொந்தமானதாயும் மாற்றினதற்காக நன்றி. மரியாள் செய்தது போல நான் உம்முடைய வார்த்தையை பெற்றுக்கொள்ளுகிறேன். உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என்று கூறுகிறேன். உம்முடைய வார்த்தையை நான் ஏற்றுக்கொள்ளுகையில், எனது விசுவாசத்தின் மறுமொழி உம்முடைய வார்த்தையின் நிறைவேறுதலை கட்டவிழ்க்கிறதென்று நம்புகிறேன் - எனது வாழ்க்கைக்கான திட்டத்தில் உமது ஒவ்வொரு வாக்குகளையும் நிறைவேற்ற, அதற்குள் இருக்கும் உமது அற்புதம் செய்யும் வல்லமை கட்டவிழ்க்கப்படுகிறது.
>
> *இந்நிமிடத்திலிருந்து உமது வார்த்தை என் வாழ்வில் செய்யும் யாவற்றிற்காகவும் நன்றி. ஆமென்.*

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017